# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

முறையீட்டு மனு எண் : 0020 / 2017 / ந

ஆணை எண் : 130 / 2017

நாள் : 20/05/2017

திரு. அ. திருவரங்கம்,
துணை வணிக வரி அலுவலர்,
3 A /11, பாஷா தெரு, ஆற்காடு,
வேலூர் மாவட்டம் - 632 503. — முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி,
ஆற்காடு, வேலூர் மாவட்டம் - 632 503. — எதிர் மனுதாரர்
மற்றும் பிறர்.

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 27.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு 30.01.2017 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்று முறையீட்டு மனு எண்:020/17 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவில் மனுதாரர் தான் வசிக்கும் பாஷா தெருவில் 240 அடிக்குள் இரண்டு குடிநீர் தொட்டிகள் நகராட்சியால் நடைமுறைகளுக்கு முரணாக அமைக்கப்பட்டுள்ளதெனவும், இவ்விரு தொட்டிகளும் ஊழல் செய்வதற்காகவே அமைக்கத் தோன்றுவதாகவும், இவ்விரு தொட்டிகளிலிருந்தும் சிலருக்கு குழாய் மூலம் வீடுகளுக்கு தண்ணீர் தெருவில் உள்ள சமூக விரோதிகளால் வழங்கப்படுவதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்விரு தண்ணீர் தொட்டிகளையும் அகற்றிட வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து இம்முறை மன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0020/17 நாள்:01.02.2017ன் மூலம் நகராட்சி ஆணையரது அறிக்கையினை சமர்ப்பித்திடுமாறு அணையிடப்பட்டது. மேலும், 16.03.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு மனுதாருக்கு அழைப்பாணை (அசல் மனு எண்:0020/2017 நாள்.08.02.2017) அனுப்பப்பட்டது. பின்னர் மேற்படி விசாரணை 28.03.2017-க்கு ஒத்தி வைக்கப்பட்டு அறிவிப்பாணை (மு.ம.எண்:0020/17/ந நாள்:01.03.2017) அனுப்பப்பட்டது. இதனிடையே ஆற்காடு நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.0202/2017/இ1 நாள்:03.03.2017, 08.03.2017 அன்று வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

'புகாரில் குறிப்பிட்டுள்ள இடம் உதவி பொறியாளரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது தொடர்புடைய அளவு புத்தகம் மற்றும் கோப்புகளும் ஆய்வு செய்யப்பட்டன.

ஆற்காடு நகராட்சி வார்டு எண்.7, பாஷா தெருவில் வாழும் பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மேற்கண்ட தெருவில் ஏற்கெனவே உள்ள கைபம்பு உடன் கூடிய ஆழ்துளை கிணற்றில் மின் விசை பம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி அமைத்துத்தர நகர மன்றம் தனது தீர்மான எண்.285, நாள்:05.10.2010ல் ரூ.75,000/-க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இச்செலவினத்தை 2010-11 நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அதன் பேரில் 18.02.2011ல் ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. R. ரமணா ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு 16.05.2011-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக ரூ.66,600/- தொகை செலவிடப்பட்டுள்ளது. தற்போது அந்த மின்விசை பம்பு மற்றும் தண்ணீர் தொட்டி பொது மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இந்நிலையில் Summer Water Management Plan 2013-14 திட்டத்தின் கீழ் வார்டு எண்.7, ராஜா கோரி சந்து, ஜமாலிபுரா இணைப்பு பகுதியில் புதிய ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மினி பவர் பம்புடன் தண்ணீர் தொட்டி அமைக்க திட்ட மதிப்பீடு ரூ.1.50 லட்சத்திற்கு நகரமன்றத் தலைவர் அவர்களிடம் 07.02.14 ல் முன் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டது. அதற்கு மன்ற தீர்மானம் எண். 63 நாள்:20.12.2014ல் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 18.02.2014 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. A.K. சர்தார்பாஷா, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 20.02.2014ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு மேலே குறிப்பிட்டுள்ள இடத்தில் ஆழ்துளை கிணற்றுடன் மினி பவர் பம்புடன் தண்ணீர் தொட்டி நிறுவும் பணி 16.05.2014ல்

முடிக்கப்பட்டு தற்போது வரை பயன்பாட்டில் உள்ளது. இப்பணிக்கு மொத்த செலவினம் ரூ.98,335/- மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்காக அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1.50 லட்சத்தில் (1,50,000-98,335=51,665/-) மீதமுள்ள சேமிப்பு தொகை ரூ.51,665/-க்கு அதே வார்டில் அருகாமையில் உள்ள பாஷா தெருவில் கதவு எண் 3 A/11 அருகில் ஏற்கனவே இருந்த கைபம்புடன கூடிய பழைய ஆழ்துளை கிணற்றில் மினிபவர் பம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி அமைக்கும் பணி முழுவதும் 31.10.2014 ல் முடிக்கப்பட்டு, தற்போது வரை பொது மக்களின் பயன்பாட்டிலும் உள்ளது.

மேற்கண்ட மீதமிருந்த சேமிப்புத் தொகையில் மேற்கொள்ளப்பட்ட பணிக்கு நகர்மன்ற அனுமதி மற்றும் தனியாக பணி உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. ஆனால் ஏற்கனவே ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டுக்கு ராஜா கோரி சந்து ஜமால்புராவில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசைப் பம்பு அமைக்க வழங்கப்பட்ட பணி உத்தரவின் அடிப்படையிலேயே இப்பணியும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதாக அப்பணிக்கான அளவு புத்தகத்தை ஆய்வு செய்ததில் தெரியவருகிறது.

மேலும் அத்தெருவில் வசிக்கும் பொதுமக்கள் மேற்படி தண்ணீர் தொட்டி மிகவும் பயனுள்ளதாக இருப்பதாகவும் அதை அகற்ற வேண்டாம் என்று ஏற்கனவே 15.07.2016ல் நகராட்சிக்கு கோரிக்கை மனுஅளித்துள்ளனர். தற்போதும் அதே கோரிக்கையை வலியுறுத்தி அத்தெருவில் வாழும் பொது மக்கள் 02.03.2017 அன்று நேரில் மனு அளித்துள்ளார்.

மேலும் ஒரே தெருவில் இரண்டு மின்விசைப்பம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி அமைக்கப்படகூடாதென்று எந்த சட்டமும், விதிமுறையும் இல்லை. மேலும், தற்போது மேற்கூறிய இடங்களில் உள்ள தண்ணீர்தொட்டி பொது மக்களின் பயன்பாட்டில் இருப்பதாலும், வறட்சி காலமாக இருப்பதாலும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வது அத்தியாவசியம் என்பதால் அத்தொட்டியை அங்கிருந்து அகற்றுவது பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்..." எனக் குறிப்பிட்டிருந்தது.

மேற்படி அறிக்கையுடன் தொடர்புடைய ஆவணங்களின் நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

28.03.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனது எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தினை சமர்ப்பித்தார். அதிலும், ஊழலுக்காக ஏற்படுத்தப்பட்ட இவ்விரு தொட்டிகளும் தனது வீட்டின் எதிரே இருந்து அகற்றுவதற்கு ஆணை வேண்டுவதாகவே கோரிக்கை வைத்துள்ளார்.

இம்முறை மன்ற நடுவ அழைப்பாணை அசல் மனு எண் 0020/17/ந நாள்:31.03.2017 ன்படி 04.05.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான ஆர்காடு நகராட்சி ஆணையர், மேற்படி இரு பணிகள் தொடர்பான ஆவணங்கள்/அளவிடு புத்தக நகலினை சமர்ப்பித்துள்ளார். மேலும், குடிநீர் பற்றாக்குறை அதிகம் நிலவுவதால் இந்த 2 தொட்டிகளும் அதே தெருவில் இருக்க வேண்டுமெனவும் அகற்ற கூடாதெனவும் அந்த பகுதி மக்கள் எழுத்து பூர்வமான கோரிக்கை அனுப்பியுள்ளார்கள் எனவும் நகராட்சி விதிகளில் மக்களின் தேவைக்கேற்ப குடிநீர் பிரச்சனை தீரும் வகையில் 2 தொட்டிகள் அமைப்பதில் எந்த விதி மீறல்களும் இல்லை எனவும் சரியான நடைமுறையே ஆகுமெனவும் பொது மக்களின் நலன் சார்ந்தே அமைந்துள்ளாகவும் வாக்குமூலம் சமர்ப்பித்துள்ளார்.

நகராட்சிக்கு சொந்தமாக பாலாற்றில் 5 நீர் உறுஞ்சும் கிணறுகள் அமைத்து குடிநீர் வழங்குதல் மற்றும் காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்குதல் ஆகியவை ஆர்காட்டில் செயல்பாட்டில் உள்ளதெனவும் குடிநீர் தேவை போதுமான வகையில் நகராட்சி பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் உள்ளாட்சி அமைப்புகளில் முறைமன்ற நடுவத்திலிருந்து அறிவிப்பு வந்ததை காரணமாக கொண்டு தவறாக தனியே நீதிமன்ற வழக்கு இருப்பதாக குறிப்பிட்டு குடிநீர் தொட்டியில் அந்த அறிவிப்பை ஒட்டி சின்டெக்ஸ் டேங்கில் இருந்த மூன்று குழாய்களை பழுதாக்கி விட்டாரெனவும் நகராட்சியின் செயல்பாட்டால் அது சரி செய்யப்பட்டதெனவும் அவருடைய இந்த நடவடிக்கையை கண்டித்து பொது மக்கள் சுமார் 30 பேர் அவர் வீட்டின் முன்பு கூடி தங்களுடைய ஆட்சேபணையை தெரிவித்து மனுதாரரது செயலை கண்டித்தனர் என்றும் தெரிவித்துள்ளார்.

மனுதாரரது கோரிக்கை மற்றும் செயல்பாடு அவர் வீட்டருகே உள்ள இரு குடிநீர் தொட்டிகளும் அகற்றப்பட வேண்டுமென்பதிலேயே முனைப்பாக உள்ளது புலனாகிறது. மேலும், மனுதாரர் குறிப்பிட்ட ஊழல் குற்றச்சாட்டும் நிருபணமாகவில்லை. இந்நிலையில் மனுதாரர் தனக்கு தொந்தரவு அளிக்கும் வகையில் எவரேனும் செயல்பட்டால் அவரை குறித்து காவல் துறையில் புகார் அளித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமே தவிர நகர்மன்ற ஒப்புதலுடன் பொது பயன்பாட்டிற்கென அமைக்கப்பட்டுள்ள குடிநீர் தொட்டியை சேதப்படுத்துவதோ, முயற்சிப்பதோ தவறான அணுகுமுறையாகும். இத்தகு செயல்பாடுகள் கண்டறியப்படின் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டப்படி காவல்துறை புகார் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இழப்பீட்டிற்கான தொகையினையும் வசூலித்திட நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் மேற்படி குடிநீர் தொட்டிகளிலிருந்து முறையற்ற வகையில் குடிநீர் இணைப்பு வழங்கப்படாவண்ணம் உரிய பராமரிப்பு நடவடிக்கைகளை உறுதி செய்து கொள்ள வேண்டுமென நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

பொது மக்கள் நலன் கருதி சேமிப்பில் பணிகள் செய்தாலும் முறைப்படி மன்றத்தில் பொருள் வைக்கப்பட வேண்டும். எனவே, இது குறித்து தனி அலுவலர் தக்க நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 20-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//—
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

**பெறுநர்**

1. திரு. அ. திருவரங்கம்,
   துணை வணிக வரி அலுவலர் (ஓ),
   3 A/11, பாஷா தெரு, ஆற்காடு,
   வேலூர் மாவட்டம் - 632 503.

2. நகராட்சி ஆணையர்,
   ஆற்காடு நகராட்சி,
   ஆற்காடு, வேலூர் மாவட்டம் - 632 503.